காலநிலை மாற்றத்தை எதிர்கொள்ளும் முன்னேறறச் செயற்திட்டத்தின் 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாய சோசலிச குடியரசிற்கும் சர்வதேச அபிவிருத்தி சங்கத்திற்கும் இடையில் கைச்சாத்திட்ட கடன் மற்றும் மானிய உடன்படிக்கையின் 4.09(ஆ) ஆம் பிரிவு மற்றும் இலங்கை சனநாய சோசலிச குடியரசிற்கும் சர்வதேச அபிவிருத்தி சங்கத்திற்கும் இடையில் கைச்சாத்திட்ட 2014 யூலை 10 ஆந் திகதிய 5417 எல்கே ஆம் இலக்க நிதியளிப்பு உடன்படிக்கையின் I ஆம் உறுப்புரை என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க வேண்டுமென நான் கருதும் என்னுடைய கருத்துரைகள் மற்றும் அவதானிப்புகள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கல், நோக்கங்கள், நிதியளித்தல் மற்றும் காலப்பகுதி என்பன

செயற்திட்டத்தின் கடன் வசதி உடன்படிக்கையின் பிரகாரம், முன்னாள் நீர்ப்பாசன மற்றும் நீர் வளங்கள் முகாமைத்துவ அமைச்சாகவிருந்த தற்போதைய விவசாய , கால்நடை அபிவிருத்தி, நீர்ப்பாசன மற்றும் மீன்பிடி மற்றும் கடற்கரை வளங்கள் அபிவிருத்தி அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் நீர்ப்பாசனத் திணைக்களம், இலங்கை மகாவலி அதிகாரசபை, வீதி அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனம் என்பன செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவர்களாக உள்ளன. காலநிலை ஆபத்தால் மக்கள் மற்றும் சொத்துக்களுக்கு ஏற்படும் பாதிப்புக்களை குறைத்தல் மற்றும் இடர்களை திறம்பட எதிர்த்து செயலாற்றுவதற்கான இயலளவை மேம்படுத்தல் என்பன செயற்திட்டத்தின் குறிக்கோள்களாகும். நிதியளித்தல் உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 14,617 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 111.8 மில்லியனாக உள்ளதுடன் அதில் ரூபா 14,382 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 110 மில்லியன் சர்வதேச அபிவிருத்திச் சங்கத்தால் நிதியளிக்கப்பட வேண்டுமென உடன்பாடு காணப்பட்டது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2014 ஆகஸ்ட் 05 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2020 யூன் 30 அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிட்டிருந்தது.

## 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

என்னனுடைய அறிக்கையின் அட்டவணை 2.1 இல் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களை தவிர, 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிதி நிலமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்புகளும் ஆளுகையுடன் அவற்றினை சாட்டுதல் செய்தலும்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத்

தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கையில் முகாமைத்தவமானது தொடர்ந்து செல்லும் எண்ணக்கருவாக தொருவதற்கு, பிரயோகிக்கக் கூடியவையாக வெளிப்படுத்தல், தொடர்ந்து செல்லும் எண்ணக்கருவுடன் தொடர்புபட்ட விடயங்கள் மற்றும் செயற்திட்டத்தின் திரவத்தன்மைக்கு முகாமைத்துவம் அல்லது குறித்த தரப்பினர் கணக்கீட்டின் தொடர்ந்து செல்லும் அடிப்படையை பயன்படுத்தல் அல்லது நெகிழ்ச்சித் தன்மையுடைய மாற்றுவழியை உருவாக்கல் அல்லது வைத்திருத்தல் ஆனால் அதேபோல செய்வதற்க ஏற்றவாறு செயற்திட்டத்தினை மதிப்பிடுவதற்காக பொறுப்புடையது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தால் தயாரிக்கப்பட வேண்டிய வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்கள் இயலக்கூடியவாறு சகல வருமானம், செலவினம், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் என்பவற்றின் முறையான புத்தகங்கள் மற்றும் ஏடுகள் பேணுவதற்கு செயற்திட்டம் வேண்டப்பட்டள்ளது.

### 1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வற்காக கணக்காய்வாளருடைய பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

## 2. நிதிசார் செயலாற்றல்

### 2.1. செயற்திட்ட நடவடிக்கைகளின் பௌதீக முன்னேற்றம்

செயற்திட்ட மதிப்பீட்டு ஆவணத்தின் பிரகாரம், அதிகமாக காலநிலை மாற்றத்தை எதிர்கொள்ளும் பொருளாதாரத்தை தாபிப்பதற்கான செயற்திட்டத்தன் நடவடிக்கைகள் பேசின் முதலீட்டு திட்டங்களின் அபிவிருத்தி, காலநிலை உட்கட்டமைப்பின் அதிகரிப்பு, அமுலாக்கல் ஆதவவுகளின் வழங்கல் மற்றும் அவசர தேவைகளின் நோக்கத்திற்காக பொறிமுறை முன்னெற்றம் போன்ற பெயருடைய 04 பிரதான கூறுகளைக்கொண்டுள்ளது. செயற்திட்டத்தால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் பௌதீக முன்னெற்றத்தில் பின்வரும் அவதானிப்பகள் மேற்கொள்ளப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்பு | விளைவு | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளருடைய சிபார்சுகள் |
|---|---|---|---|
| பேசின் முதலீட்டு திட்டங்களின் அபிவிருத்தி, காலநிலை உட்கட்டமைப்பின் அதிகரிப்பு, அமுலாக்கல் ஆதவவுகளின் வழங்கல் மற்றும் அவசர தேவைகளின் நோக்கத்திற்காக பொறிமுறை முன்னெற்றம் போன்ற கூறுகளின் கீழ் அமுலாக்கப்பட்ட நடவடிக்கைகள் மீதான பௌதீக முன்னேற்றம் செயற்திட்ட நடவடிக்கைகள் தொடங்கிய திகதியிலிருந்து 53 மாதங்கள் கடந்த பின்னர் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 55 சதவீதம் முதல் 72 சதவீமாக வரையான மெதுவான முன்னேற்றமாக இருந்தது. | செயற்திட்ட காலப்பகுதி நீடிததல் மற்றும் செயற்திட்டத்தின் கிரயம் அதிகரிக்கும் சாத்தியத்தன்மை. | முறையாக கருத்து தெரிவிக்கப்படவில்லை. | கால நீடிப்பு மற்றும் கிரய அதிகரிப்பை தவிர்ப்பதற்கு செயற்திட்டத்தின் நடவடிக்கைகளை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 2.2. வேலைத்தளங்கள் மீது செய்யப்பட்ட அவதானிப்புகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | விளைவு | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளருடைய சிபார்சுகள் |
|---|---|---|---|---|
| (அ) | மொனறாகலை மாவட்டத்தில் முத்துகட்டிய நீர்த் தேக்கத்தின் பிரதான கால்வாய் அபிவிருத்தியின் கீழான வேலைகள் 2 ஒப்பந்த பொதிகளின் கீழ் அமுலாக்கப்பட்டிருந்ததுடன் கால்வாயின் 5 கிலோ மீற்றர் அபிவிருத்தி | வீட்டுரிமையாளர்களிற்கு குறித்த நலன்கள் பெறப்பட்டிருக்கவில்லை. | ஒப்பந்தகாரரால் சமர்ப்பிக்கப்பட்ட செயலாற்றல் பிணைமுறி அறவிடுவதற்கு நீர்ப்பாசனத் திணைக்களத்தால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | ஒப்பந்த முகாமைத்துவம் மீதான் கட்டுப்பாட்டினை வலுப்படுத்தலிற்கான தெவை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | வேலைகளின் ஒப்பந்தகாரரின் தவறுகள் காரணமாக அரைவாசியில் கைவிடப்பட்டது. இரண்டாவது 5 கிலோமீற்றர் அபிவிருத்தி வேலைகள் 2016 நவம்பர் 30 இல் உள்ளவாறு ரூபா 23.49 மில்லியன் கிரயத்தில் பூர்த்தியாக்கப்பட்டிருந்ததுடன் இது குறைவான நிர்மாணம் காரணமாக கால்வாய்க்குள் சாய்வு சுவர் 30 கிலோமீற்றர் விழுந்திருந்தது என 2017 சனவரி 26 இல் மேற்கொள்ளப்பட்ட களப்பரிசோதனைகளில் வெளிப்பட்டது. எவ்வாறாயினும், 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு உரிய சுவரி ஒரு பகுதி நிர்மாணிப்பதற்று நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | இரண்டாவது ஒப்பந்தகாரருக்கு இறுதிக் கொடுப்பனவுகளிலிருந்து ரூபா 1.62 மில்லியன் தொகை கழிக்கப்பட்டிருந்தது. | |
| (ஆ) | ரூபா 50.94 மில்லியன் கிரயத்தில் மத்துக்கட்டிய நீர்த்தேக்கதின் கிளைக் கால்வாய் அபிவிருத்திக்கு வேறு 3 பொதிகளின் கீழ் 2016 இல் வழங்கப்பட்ட ஒப்பந்தம் மீதான அபிவிருத்தி வெலைகள் ஒப்பந்தகாரரின் தவறுகள் காரணமாக 2018 இல் நிறுத்தப்பட்டிருந்தது. | -மேற்படி- | ஒப்பந்தகாரரால் சமர்ப்பிக்கப்பட்ட செயலாற்றல் பிணைமுறியை அறவிடுவதற்கு நீர்ப்பாசன திணைக்களத்தால் நடவடிக்கை எடுக்கப்பட்டது. | -மேற்படி- |
| (இ) | குருநாகல் மாவட்டத்தில் ஹத்வத்துன ஓயா புனரமைப்பு செயற்திட்ட அமுலாக்கல் நிறைவேற்றுவதற்கு ரூபா 112.57 மில்லியன் கிரயத்தில் 04 ஒப்பந்தங்கள் வழங்கப்பட்டிருந்தது என அவதானிக்கப்பட்டதுடன் பிரதான கால்வாயின் இடது கரையில் 8+340 கிலோமீற்றர் வலது கரை கால்வாய் புனரமைப்பு வேலைகள், 0+409 கிலோமீற்றர் குறுக்குப்பாதை நிர்மாணம் மற்றும் பிரதான கால்வாயின் இடது கரையின் 11+50 கிலோமீற்றர் பக்க சுவர் நிர்மாணம் என்பவற்றில் பல குறைபாடுகளை 2019 யூன் மாதத்தில் | மிகுதி 18 மாத காலத்தின் போது 42..22 சதவீதத்தை பிரதிநிதித்தவப்படுத்துகின்ற ரூபா 14,383 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 46.44 மில்லியன் தொகை பயன்படுத்தல் நலுவியுள்ளதன் சாத்தியத் தன்மை. | வேண்டப்பட்ட நியமம் வரை கரவல் இடுவதில் தரமான கட்டுப்பாட்டை மதிப்பிடுவதற்கு ஒப்பந்தகாரரை அறிவுறுத்தப்பட்டது. | தரமான உத்தரவாதத்தில் கட்டுப்பாடுகளை வலுப்படுத்த வேண்டிய தேவை. |

மேற்கொள்ளப்பட்ட களப் பரிசோதனைகளின் போது வெளிப்பட்டது. மேலும், விவசாய வீதிகளின் 0+05 கிலோமீரில் இருந்து 0+08 கிலோமீற்றுக்கள் வரையான பிரிவன் வீதி வேலைகள் நலிவான கிரவலிடல் காரணமாக நியமத்திற்கு வராதிருந்தது.

## 2.3. குறைவாகபயன்படுத்திய வளங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | விளைவு | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளருடைய சிபார்சுகள் |
|---|---|---|---|
| ரூபா 14,383 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 110 மில்லியனான மொத்த ஒதுக்கீடுகளில் 57.78 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ரூபா 9,470 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 63.56 மில்லியன் மாத்திரமே 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பயன்படுத்தப்பட்டிருந்தது. | இருக்கின்ற மிகுதி 18 மாத காலப்பகுதியின் போது 42.22 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ரூபா 4,913 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 46.44 மில்லியன் பயன்படுத்தல் சாத்தியத் தன்மை நலிவாவுள்ளன | செயற்திட்டத்தின் நடவடிக்கைகளை நிறைவெற்றுவதற்கு அதன் அமுலாக்கல் முகவரடகளுடன் இணைந்து செயற்பட செயற்திட்டத்தால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருருந்தது. | செயற்திட்டத்தின் கீழ் செய்யப்பட்ட ஒதுக்கீடுகளை பயன்படுத்தவதற்கு அர்த்தமுள்ள நடவடிக்கை எடுக்க வேண்டிய தேவை. |

## 2.4. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

| கணக்காய்வு அவதானிப்பு | விளைவு | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளருடைய சிபார்சுகள் |
| --- | --- | --- | --- |
| செயற்திட்டமானது உள்ளக கணக்காய்வாளர் ஒருவரை சேர்த்திருக்கவில்லை பதிலாக உள்ளக கணக்காய்வு நடவடிக்கைகள் செயற்திட்ட பணிப்பாளரல் நியமிக்கப்பட்ட பணிப்பாளர், நீர்ப்பாசன திணைக்களத்தின் கணக்காளர், இலங்கை மகாவலி அதிகாரசபையின் பணிப்பாளர், வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனம் மற்றும் முன்னாள் நீர்ப் பாசனம் மற்றும் நீர் வள முகாமைத்துவ அமைச்சு என்பவற்றின் 03 சிரேஸ்ட கணக்காய்வு உத்தியோகத்தர்கள் என்போரை கொண்டுள்ள செயற்திட்டத்தின் உள்ளக கணக்காய்வு குழுவால் அமுலாக்கப்பட்டன. செயற்திட்ட நடவடிக்கைகள் மீது பிரச்சனைகளை கண்டுபிடிக்க இயலக்கூடியவாறு விரிவான புலனாய்வுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது. | செயற்திட்ட நடவடிக்கைகளில் முறையான உள்ளக கட்டுப்பாட்டை தாபிப்பகை பாதிக்கும் | செயற்திட்டம் இறுதிக் கட்டத்தில் இருந்தமையால் புதிய செயற்திட்டங்களை அமுலாக்கும் நெரத்தில் சுற்றறிக்கை அறிவுறுத்தல்கள் பின்பற்றுவதற்கு கவனத்திற்கொள்ளப்பட்டது. | செயற்திட்டத்தால் அமுலாக்கப்பட்ட நடவடிக்கைகளில் மீளாய்வாண்டு இறுதியில் சுதந்திரமான மீளாய்வை மேற்கொள்வதற்கு இயலக்கூடியவாறு இருக்கவில்லை. |